**பதிவுக் கட்டணம்**

**THE PRINCIPAL**

St. Joseph's College (Autonomous),
Payable at Tiruchirappalli – 620 002.

என்னும் பெயரில் கேட்பு வரைவோலையாக (DD) செலுத்தப்பட வேண்டும்.

அச்சு வடிவிலான கட்டுரை (Hard Copy) வரைவோலை. (D.D.) ஆகிய இரண்டும் வந்து சேர வேண்டிய இறுதி நாள் : 25 பிப்ரவரி 2021.

## கருத்தரங்கக் குழுக்கள்

*புரவலர்கள்*

அருள் முனைவர் **ஞா.லெயோனார்டு சே.ச**
அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

அருள்முனைவர் **செ.பீட்டர் சே.ச,**
செயலர், தூய வளனார் கல்லூரி

அருள்முனைவர் **ம.ஆரோக்கியசாமி சேவியர் சே.ச**
முதல்வர், தூய வளனார் கல்லூரி

*அமைப்பாளர்*

**முனைவர் ஞா. பெஸ்கி**
தமிழாய்வுத் துறைத்தலைவர்

*துணை அமைப்பாளர்*

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்**
ஒருங்கிணைப்பாளர், பணிமுறை - II

*கருத்தரங்கச்செயலர்*

**முனைவர் சி. ஷகிலாபானு**

*பொருளர்*

**முனைவர் ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்**

*இணைப் பொருளர்*

**முனைவர் இரா. முரளிகிருட்டினன்**

*பதிப்புக்குழு*

**முனைவர் செ. கென்னடி**
**முனைவர் இலா. சார்லஸ்**
**முனைவர் ஜா. சலேத்**

*அமர்வு ஏற்பாடு*

**முனைவர் ஆ. ஜோசப் சகாயராஜ்**
**முனைவர் ஆ. இராஜாத்தி**
**முனைவர் சு. சீனிவாசன்**

*பதிவுக்குழு*

**திருமிகு சி. பாக்கிய செல்வரதி**
**திருமிகு ஆ. அடைக்கலராஜ்**
**திருமிகு க. கலைப்பொன்னி**

*உணவுக்குழு*

**முனைவர் டே. வில்சன்**
**முனைவர் சு. அ. அன்னையப்பன்**
**திருமிகு கா. ஜான்கென்னடி**

*விருந்தோம்பல்*

**முனைவர் பொன். புஷ்பராஜ்**
**திருமிகு இ. யோகராஜ்**
**முனைவர் போ. ஜான்சன்**

*மேடைப் பொறுப்பு*

**முனைவர் ஆ.மரியதனபால்**
**திருமிகு தே. இன்பெண்ட் ஜெபர்சன் ஜீசஸ்**

*வரவேற்புக் குழு*

**முனைவர் ம. தனலெட்சுமி**
**முனைவர் ஜா. ஸ்டெல்லா மேரி**

*விளம்பரம் மக்கள் தொடர்பு*

**முனைவர் ரெ. நல்லமுத்து**
**திருமிகு மா. ராஜா**



தேசியக் கருத்தரங்கம்

# தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை

*National Seminar on*
**'AGRICULTURE IN TAMIL LITERATURE'**

**அறிவிப்பும் அழைப்பும்**
12,13 மார்ச் 2021

**தமிழாய்வுத்துறை**
**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி**
($A^{++}$ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும் சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)
**திருச்சிராப்பள்ளி - 620 002.**

## பெருந்தகையீர் வணக்கம்,

தென்னிந்தியாவில் தமிழகத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகரில் ‘கல்வி வழி மனிதம் மலர’ என்னும் இலக்குடன் 176 ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றி வருகின்றது எம் கல்லூரி. ‘உண்மைக்கும் நன்மைக்கும்’ என்னும் விருதுவாக்கோடு, தமிழக சேசு சபையினரால் நடத்தப்பெறுகின்ற இக்கல்லூரி பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல் வளத்தனித் தகுதியும், தேசியதர மதிப்பீட்டுக் குழுவின் (நான்காம் சுற்று) A++ தரத்தகுதியும், சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றுள்ளது. இத்தகு பெருமைமிகு கல்லூரியில் நூல்களை வெளியிடுவதிலும், கருத்தரங்குகளை நடத்துவதிலும், முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும், சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை, ஆண்டுதோறும் காலத்திற்கு ஏற்ற பயனுள்ள தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. இத்தகைய ஆய்வுப்போக்கினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இக்கல்வியாண்டில் ‘தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை’ என்னும் பொருண்மையில் எம் கல்லூரியின் தமிழாய்வுத்துறை வருகின்ற 12, 13 மார்ச் 2021 ஆகிய நாட்களில் தேசியக் கருத்தரங்கத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## கருத்தரங்க நோக்கம்

மனித நாகரிக வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு மிக இன்றியமையாதது. சமூகப் பொருளாதார மாற்றம் உண்டாவதற்கு, வேளாண்மையானது மிக முக்கிய கருவியாக உள்ளது. வேளாண்மையை முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டு விளங்கும் நாடுகள் எல்லாம் உலக அரங்கில் முன்னிலை வகிக்கும் நாடுகளாகத்தான் உள்ளன.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையான உணவுப் பொருட்களை விளைவிக்கும் உழவர்கள் போற்றத்தக்கவர்களே! ஆகையால் தான் “உழுவார் உலகத்தார்க்கு ஆணி” என்றார் வள்ளுவர். தொழில் வளர்ச்சி மட்டுமே மேலோங்கிய நாடுகளைக் காட்டிலும் தொழிலோடு வேளாண்மையும் நன்கு வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறுகின்றன. ஆகையால் தான் “உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்று பாடினார் மகாகவி பாரதியார்.

அறிவியல் தொழில்நுட்பக் கருவிகளின் மிகுபயன்பாடும், உலகமயமாக்கலின் நடைமுறைகளும், நீர்வள மேலாண்மைச் சிக்கல்களும், நாகரிக வாழ்க்கை மீதான மோகமும் இன்றைய வேளாண்மை வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக அமைந்துள்ளன. இத்தகைய சூழலில் வேளாண்மை குறித்த நேர்மறைச் சிந்தனைகளை விதைப்பதும் வேளாண்மைசார் தமிழர் பண்பாட்டை மீட்டெடுப்பதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். எனவே பண்டைத்தமிழரின் வேளாண்மைச் சிந்தனைகளை வெளிக்கொணர்வதும், தமிழர் வாழ்விலும் பண்பாட்டிலும் வேளாண்மை பெற்றுள்ள செல்வாக்கைக் கண்டறிவதும் இக்கருத்தரங்கின் முதன்மையான நோக்கங்களாக அமைகின்றன.

## ஆய்வுக்களங்கள்

சங்க கால இலக்கியங்கள் தொடங்கித் தற்கால இலக்கியங்கள் வரையிலான பகுதியில் ஆய்வுக் கட்டுரைகள் அமைந்திடலாம்.

கட்டுரைகளை A4 தாளில் 10 பக்கத்திற்குக் குறையாமலும் 12 பக்கத்திற்கு மிகாமலும் பாமினி (Bamini) எழுத்துருவில் (Font Size 12 : Line Space 1.5) (MS-Word) கணினித் தட்டச்சு செய்து tamilseminarsjc@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அதற்கு முன்பாக (https://forms.gle/YXouWvAVNKd6ygpB7) என்னும் இணைப்பில் பதிவு செய்திட வேண்டும். இந்தப் பதிவுப்படிவத்தில் கட்டணத்திற்கான வரைவோலையின் நகலைப் (Scanned Copy) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பும்போது, தத்தம் நெறியாளரிடம் கையொப்பம் பெற்றுச் செம்மையாக்கம் செய்து அனுப்ப வேண்டும். கட்டுரைகள் மின்னஞ்சலில் அனுப்பியதைக் கட்டுரையாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வுச் சுருக்கம், கலைச்சொற்கள், முன்னுரை ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். கட்டுரையின் இறுதியில் சான்றெண் விளக்கம், துணைநூற்பட்டியல் ஆகியவையும் இடம்பெறல் வேண்டும்.

வல்லுநர் குழுவால் ஏற்பளிக்கப் பெற்ற கட்டுரைகள் மட்டுமே கருத்தரங்கில் வாசித்தளிக்கவும், ஆய்வுக்கோவையில் இடம்பெறவும் அனுமதிக்கப்படும். கருத்தரங்கப் பொருண்மைக்குத் தொடர்பற்ற கட்டுரைகள் ஏற்கப்பட மாட்டா.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுக் கருத்தரங்கத் தொடக்க விழாவில் அச்சு வடிவில் நூலாக ISBN எண்ணுடன் வெளியிடப் பெறும்.

## பதிவுக்கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| பேராளர் | : | 700 |
| பங்கேற்பாளர் | : | 200 |
| ஆய்வு மாணவர் | : | 300 |
| அயல்நாட்டுக் கட்டுரையாளர் | : | $15 |